1983 ஜனவரி 29]

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, இலவசமாகக் கிடைக்கும் என்றால் அதிக அக்கறை வராது. விலைக்குக் கிடைத்தால்தான் அக்கறை வரும்.

திரு. டி. மணி: தலைவர் அவர்களே, இந்த மா, கொய்யா, பலா போன்ற பழ வகைகளைத் தருகின்ற கன்றுகளை எல்லா இடங்களிலும் கிடைக்கக்கூடிய அளவிலே விநியோகிக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா? இதிலே விசேஷமாக கன்னியாகுமரி மாவட்டத்தில் மங்குஸ்தான் என்பது ஒரு விசேஷமான பழம். அந்தக் கன்றுகளை விஸ்தரிப்பதற்கான ஆக்கப்பூர்வமான நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, எல்லா பழ வகைகளும் மாநிலத்தின் எல்லாப் பகுதிகளிலும் வராது. எனவே, அந்தந்தப் பகுதிக்கு ஏற்ற வகையிலேதான் விநியோகம் செய்யமுடியும்.

திரு. இல. பலராமன்: தலைவர் அவர்களே, வடஆற்காடு, தர்மபுரி, சேலம் போன்ற இடங்களில் ஏற்றுமதிக்குத் தகுதி வாய்ந்த மா வகைகள் அதிகமாக இருப்பதால் அங்கே அவற்றை அதிகமாக உற்பத்தி செய்யக்கூடிய சாத்தியக்கூறு இருப்பதால் புதிய ரகங்களை அங்கே அதிகமாக விநியோகிக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கின்றது? மேலும், அந்தக் கன்றுகளை மலிவான விலையில் தருவதற்கு அரசு முயற்சி எடுத்திருக்கின்றதா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவரவர்களே, அந்த வகையில் தோட்டக்கலைத் துறை முயற்சி மேற்கொண்டிருப்பதாக குறிப்பு இருக்கின்றது.

பெருந்துறை வட்டத்தில் கம்பளிப்புழு நிலக்கடலைப் பயிரை நாசம் செய்வதைத் தடுக்கும் திட்டம்.

*வினா எண் 48—திரு தி. கா நல்லப்பன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பெருந்துறை வட்டத்தில் வருடா வருடம் ஆவணி, புரட்டாசி மாதங்களில் வேர்க்கடலை செடியில் கம்பளிப்புழு விழுந்து பயிர்களை நாசம் செய்வது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) இந்த ஆண்டு அதைத் தடுக்க அரசு ஆரம்பத்திலேயே நடவடிக்கை எடுக்க முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) ஆம்.

(ஆ) சிவப்பு கம்பளிப்புழு நிலக்கடலைப் பயிரை தாக்குவதைத் தடுக்க, வருமுன் காப்பாக ஒட்டுமொத்த பயிர் பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

திரு. தி. கா. நல்லப்பன் : தலைவர் அவர்களே, இந்த நிலக் கடலைப் புழுவைப் பொறுத்தவரையில் என்னதான் நடவடிக்கை எடுத்தாலும் அது வருடா வருடம் கோடிக்கணக்கான ரூபாய் பெறுமானம் உள்ள நிலக்கடலையைத் தின்றுகொண்டுதான் இருக்கிறது. எனவே, அந்தப் புழுவைப் பொறுத்தவரையில் அது பட்டுப்பூச்சி போன்ற பறக்கின்ற காலத்திலேயே அதைக் கொல் வதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அந்த வகையிலேதான் முயற்சி மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப் படுகின்றது. அது வருடா வருடம் வருகின்றது. வருடா வருடம் நடவடிக்கையும் நாம் எடுக்கிறோம்.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, வேர்க் கடலைப் புழுவினால் மதுரை மாவட்டத்திலே குறிப்பாக திருமங்கலம், உசிலம்பட்டி தாலுக்காக்களிலே பல்லாயிரக் கணக்கான நிலங்கள் பாதிக்கப்பட்டு வேளாண்மைத் தொழில் செய்பவர்கள் பெருத்த நட்டமடைகிறார்கள். ஆனால் அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்றபோது ஒவ்வொரு ஆண்டும் வருகின்றது ஒவ்வொரு ஆண்டும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்று சொன்னார்கள். இதிலே இன்னும் கொஞ்சம் ஆழமாக நடவடிக்கை எடுத்து அறவே இந்தப் புழுவினை ஒழிக்க நடவடிக்கையினை வேளாண்மைத்துறை மேற்கொண்டிருக் கின்றதா? இதுவரை இல்லாவிட்டாலும் இனிமேலாவது முறைப் படியாக நடவடிக்கை எடுத்து அந்த வேளாண் மக்களின் துயரினைத் துடைக்க ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அது குறித்து ஆராய்ச்சி ஒரு பக்கம் மேற்கொள்ளப்படுகின்றது என்றாலும் 1982–83-ல் சிவப்பு கம்பளிப் புழுக்கள் விழாமல் தடுப்பதற்காக 6,000 ஹெக்டேர் நிலப்பரப்பில் ஒட்டுமொத்த பயிர்பாதுகாப்பு நடவடிக்கை எடுக்க திட்டமிடப்பட்டிருக் கின்றது.

திரு. தி. கா. நல்லப்பன் : தலைவர் அவர்களே, வேளாண்மை சம்பந்தப்பட்ட அந்த அதிகாரிகளிடம் இது சம்பந்தமாக அணுகு கின்றபோது அவர்கள் காட்டுக்குள்ளே பெட்ரோமாக்ஸ் லைட் வைத்து அதன் மூலம் பார்க்கின்றபோது அது தண்ணீரிலே விழுந்து தானாகவே இறக்கும் என்றுதான் சொல்கிறார்களே தவிர இதுவரை முறையான மருந்து கண்டுபிடிக்கப்பட்டதாகச் சொல்ல வில்லை. எனவே அதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கின்றதா?

1983 ஜனவரி 29]

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : அந்த வகையிலே ஒட்டு மொத்தமாக பயிர் பாதுகாப்பு நடவடிக்கை என்று மேற்கொண்டிருக்கிறோம். 1982—83-ல் பருந்துறைப் பகுதியைப் பொறுத்தவரை 500 ஏக்கருக்கு நாம் நடவடிக்கை எடுக்க இருக்கிறோம். அதில் மானியம் ரூ. 20 ஆயிரம், கடன் ரூ. 20 ஆயிரம் தர இருக்கிறோம்.

சென்னை நகரில் நடைபாதையில் கட்டப்பட்டுள்ள கோயில்கள்.

*வினா எண். 49—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரில் அண்மைக்காலத்தில் நடை பாதைக் கோயில்கள் ஏராளமாகப் புதிதாகக் கட்டப்பட்டுள்ளது அரசின் கவனத்துக்கு வந்ததா?

(ஆ) ஆம் எனில் இதன்மேல் அரசு எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (ஆ) 7 கோயில்கள் நடை பாதையில் கட்டப்பட்டுள்ளன. அவைகளை நீக்க மாநகராட்சி தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. து. புருஷோத்தமன் : பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் மக்கள் தொகை பெருகிக் கொண்டு வருகிறது. அதனால் எல்லாச் சாலைகளிலும் போக்குவரத்து நெரிச்சல் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. இந்த நேரத்தில் இப்படிப்பட்ட நடைபாதை கோயில்கள் நாளுக்கு நாள் பெருகிக்கொண்டு வருகிறது. இந்த நடைப்பாதை கோயில்கள் ஏற்படுவதைத் தடுக்க அல்லது வேறு இடங்களில் மாற்றுவதற்கு ஏதாவது அரசிடம் திட்டம் உள்ளதா? அதேபோல் போக்குவரத்து நெரிச்சல் உள்ள இடங்களில் எங்கு பார்த்தாலும் எல்லா சாலைச் சந்திப்புகளிலும் அரசியல் கட்சிகளின் கொடிக் கம்பங்கள் அமைக்கப்படுகின்றன. அதனால் போக்குவரத்து நெரிச்சல் ஏற்படுகிறது. அதையும் கவனித்து போக்குவரத்து நெரிச்சல் ஏற்படாத வகையில் அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்க உள்ளதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : நடை பாதை கோயில்களுக்கு மாற்று வழிமுறைகள் அல்லது வேறு இடங்களில் ஏற்படுத்தும் திட்டம் மாநகராட்சியின் பரிசீலனையில் இல்லை. பொதுமக்களுக்கும், போக்குவரத்துக்கும் இடையூறு இல்லாமல் கோயில்கள் இருக்கவேண்டும் என்பதுதான் அரசின் எண்ணம். இந்த அரசைப் பொறுத்தவரையில் கோயில்கள் இருக்கக்கூடாது என்பது அல்ல. கோயில்கள் கொடியவர்களின் கூடாரமாக மாறிவிடக்கூடாது என்பதுதான் நம்முடைய